2026 ஜூலை மாதம் 29– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 11/2026

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29– ஆம் தேதி புதன்கிழமை

திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW6 (LW5) – ரத்தினம் |
| தகப்பனார் பெயர்: | காளியப்பன் |
| ஊர்: | அன்னஞ்சி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | ஓட்டுநர் |
| வயது : | 50 |

29.07.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஓட்டுநர் உரிமம் மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை**:–

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், தேனி வட்டம், அன்னஞ்சியில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எங்கள் தெருவை சேர்ந்தவர்கள் ஆவார்கள். 09.04.2024 ம் தேதி இரவு 10.00 மணியளவில் நாங்கள் திருவிழாவில் இருந்தோம். பின்னர் நாங்கள் அன்னஞ்சியில் உள்ள காளியம்மன் கோவிலுக்கு வந்தோம். அங்கு போலீசார் இருந்தார்கள். அவர்களிடம் என்ன என்று விபரம் கேட்டேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சி

கையொப்பம் என்னுடையது இல்லை. இவ்வழக்கை பற்றி எனக்கு வேறு எதுவும் தெரியாது.

**<u>சாட்சி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2. 13.04.2024ம் தேதி 07.17 மணிக்கு எங்கள் தெருவை சேர்ந்த எதிரி குருசாமி மகன் பழனிச்சாமி என்பவர் அல்லிநகரம் காவல் ஆய்வாளர் முன்னிலையில் ஓர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதற்கு நானும், பழனிச்சாமியும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துவிட்டு, தற்போது எதிரிகளும் நானும் ஒரே தெருவில் வசித்து வருவதால் எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற எதிரிகளுக்கு அனுசரணையாகவும், போலீசாருக்கு எதிராகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 29.07.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.29 17:00:42 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
29.07.2026